திருச்சி சிவா எம்.பி. கண்டன உரை! மக்கள் நலப் பணிகளை முடக்கும்

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேடு: இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, அக்.15-

"எல் நினோ" மழையின் தீவிர அபாயங்களை அலட்சியப்படுத்தியும் - மாநக ராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டை யும் கண்டித்து "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!" நடைபெறுகிறது என சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

எல் நினோ தீவிரம் மற்றும் வடகிழக்குப் பருவ மழை அபாயங்களை அலட்சியப்படுத்துவதையும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், சென்னை



வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி. சேகர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்பி, கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி. ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்!

எல் நினோ தீவிரம் மற்றும் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய அபாயங்களை அலட்சியப் படுத்துவதையும், மாநக ராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் தமிழக அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து, இன்று (15.10.2026 - வியாழக் கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் வகையில், மழைநீர் வடிகால்களைத் தூர்வாருதல், கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றிச் சீரமைத்தல், கூவம் ஆற்றின் முகத்துவாரப் பகுதிகளில் நீரோட்டத்தடைகளை அகற்றுதல், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் உரிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகள் தங்களது மக்கள் நலப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்ள வழிவகை செய்ய வலியுறுத்தியும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மேலும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் இரா. கிரிராஜன் எம்.பி., ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், இ.பரந்தாமன், ப. ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, கார்த்திக் மோகன்,எஸ். மணிமுடி, வே. உமாகாந்த், பி.கே. மூர்த்தி, கே.எஸ்.எம். நாதன், எம். விஜயகுமார், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், ஆர். வரதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன், இசட். ஆசாத் ஆகியோரும்,

பகுதிக் கழகச் செயலாளர்கள்: எஸ். ராஜசேகர், எஸ். முரளி, சொ. வேலு, வி. சுதாகர், கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ. நாகராஜன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக் கண்ணு ஆகியோரும்,

பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ். பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ. மணி, பி. உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், அ. நிர்மலாதேவி, எம். இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி ஆகியோரும்,

மாவட்டச் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், பா. ஜெகதீஷ், ஜெ. பாலமுருகன், ஜி.ஜே. பிரபு, கே. வினோத், எஸ். தனசேகர், நா. ரஞ்சித் விஜயாலயன், எல்.பி.எஃப். மோகன், ஜி. தாமோதரன், நா. துலுக்கானம், கு. கிருஷ்ண மூர்த்தி, ஆர்.எஸ். சித்திக், இரா. வீரமணி, பி. விஜயகுமார், பா. பிரதீப்குமார், எல். சம்பத்குமார், ம. அசோக்குமார், எம். விநாயகம், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி. சாந்தகுமாரி, எம். பெரோஸ்கான், க. ராஜாமுகமது ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாநகர மன்ற உறுப்பினர்கள், வட்டகழகச் செயலாளர்கள், பகுதி/வட்ட கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு கண்டனத்தைப் பதிவு செய்ய உள்ளனர்.

மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளை விரைந்து நிறைவேற்றவும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கவும் வலியுறுத்தி நடைபெறும் இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை கிழக்கு- வடக்கு- வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

த.வெ.க. அரசின் "மாற்ற" அரசியல் இதுதானா?

கொள்ளை விலையில் மின் கொள்முதலா?

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, அக்.15-

கொடுத்து வாக்குறுதிகளை நிறைவேற்றச் சொன்னால் கஜானா காலி என்றவர்கள் இன்று கொள்ளை விலையில் மின் சாரம் கொள்முதல் செய்வதா எனவும், இதுதான் த.வெ.க. அரசின் "மாற்ற" அரசியலா எனவும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:

தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல், காற்று இல்லை, மழை இல்லை, என தினமும் கதையடித்துவிட்டுக் கொண்டிருந்தவர்கள், உண்மைகளை மறைக்க முடியாமல் இன்றைக்குத் தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவில் யூனிட் ஒன்றுக்கு ரூ.35 கொடுத்து வாங்க இருக்கிறார்கள்.

தீராவிட மாடல் ஆட்சியில் ரூ.10க்குக் குறைவாக மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், இந்த அரசின் மெத்தனத்தால் இன்றைக்கு ரூ.35க்கு வாங்கும் நிலைக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது.



கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் சொன்னால் கஜானா காலி என கையை விரிப்பவர்கள், இன்று கொள்ளை விலையில் கொள்முதல் செய்து தமிழ் நாட்டின் கடன் சுமையை மேலும் அதிகரிக்க உள்ளனர். இதுதான் தவெக அரசின் "மாற்ற" அரசியலா?

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

60 அடிக்கும் கீழே சென்ற மேட்டூர் அணை நீர்மட்டம்!

மேட்டூர், அக்.15-

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று (அக். 14) மாலை நிலவரப்படி, வினாடிக்கு 787 கன அடியிலிருந்து வினாடிக்கு 696 கன அடியாக குறைந்தது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணைக்கு வரும் நீரின் அளவைவிட அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் 59.58 அடியிலிருந்து 59.13 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 24.04 டிஎம்சியாக உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடிக்கும் கீழே சென்றுள்ளது. இதனால் சம்பா சாகுபடிக்கு தடையின்றி தண்ணீர் கிடைக்குமா என்று விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

செப்டம்பர் 1ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்வரத்து குறைவு காரணமாக அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சகோதரியாக எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்!

சி.ஜே.பி. நிர்வாகிகள் கைதுக்கு மம்தா பானர்ஜி கண்டனம்!

கொல்கத்தா, அக்.15-

மேற்கு வங்கத்தின் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, சிஜேபி நிர்வாகிகள் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்குத் தனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்துள்ளார். மேலும், நாட்டின் கோடிக் கணக்கான இளைஞர்களை நோக்கி, "சகோதரியாக எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்" என்று அவர் உறுதியளித்துள்ளார்.

மம்தா பானர்ஜியின் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:

இந்தக் கைது நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து மம்தா பானர்ஜி தனது சமூக வலைதளப் பதிவில், ஜனநாயக உரிமைக்காக எங்களுடைய முந்தைய தலைமுறையினரும் நாங்களும் கடுமையாகப் போராடியுள்ளோம்; அந்தப் போராட்டத்தை நாம் தொடர்ந்து செய்தாக வேண்டும். அசுதோஷ் ரன்கா மற்றும் சௌரவ் தாஸ் கைது செய்யப்பட்டுள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தருணம் இது. இது ஒட்டுமொத்த தலைமுறையையும் அச்சுறுத்தி அமைதிப்படுத்தும் முயற்சியாகும். இதை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.



நமது அரசியலமைப்பு உரிமைகளை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது.

நாட்டின் பல பகுதிகளில் இதுபோன்ற ஜனநாயகப் படுகொலைகள் தொடர்ந்து அரங்கேறி வருவதாக குறிப்பிட்ட அவர், மேற்கு வங்கத்தில் உள்ள 14,000 மக்கள் காவல்துறையினரின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

'மக்களின், மக்களால், மக்களுக்காக' என்ற ஜனநாயகக் கோட்பாட்டை மறந்து செயல்படும் அரசு, தனது இறுதிக்கட்டத்தை நெருங்கி வருவதாகவும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

இறுதியாக, நாட்டின் இளம் தலைமுறையினருக்குத் தைரியம் ஊட்டும் வகையில், "கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு நான் சொல்கிறேன்; உங்கள் சகோதரி உங்களுடன் இன்றும், என்றும், எப்போதும் இருக்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று நமது நாட்டைப் பாதுகாப்போம்" என்று மம்தா பானர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

ரயில்வே பணியாளர்களுக்கு

பண்டிகைக்கால போனஸ்; 78 நாள்களுக்கான ஊதியம்!

சென்னை, அக்.15-

ரயில்வே பணியாளர்களுக்கு தீபாவளி போனஸாக 78 நாள்களுக்கான ஊதியம் வழங்க ஒன்றிய அமைச்சரவை நேற்று (அக். 14) ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த தீபாவளி போனஸானது சுமார் 11.40 லட்சம் ரயில்வே பணியாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது. இதில் தண்டவாளப் பராமரிப்பாளர்கள், ஓட்டுநர்கள், கார்டுகள், ஸ்டேஷன் மாஸ்டர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் மற்றும் இதர சி பிரிவு பணியாளர்கள் போன்றோர் அடங்குவர்.

இதற்காக ரூ. 2,009 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தகுதி வாய்ந்த ஒரு ரயில்வே ஊழியருக்கு அதிகபட்சத் தொகையாக ரூ. 17,951 வழங்கப்படும்.

2025-26 ஆம் ஆண்டில் ரயில்வே துறை 167 கோடிடன் சரக்குகளைக் கையாண்டுள்ளதாகவும் சுமார் 741 கோடி பயணிகள் ரயில்களில் பயணித்ததாகவும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், ரயில்வே துறையை மேம்படுத்தும் வகையில் பணியாற்றிய இந்த ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக இந்த போனஸ் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மூவர்ணக் கொடி நமது பெருமை!

'தேசியக் கொடியை ஏற்றுவோம் - போராட்டத்தைத் தொடர்வோம்'!

சி.ஜே.பி. தலைவர் அபிஜித் தீப்கே அழைப்பு!

புதுடெல்லி, அக்.15-

சி.ஜே.பி.யின் முக்கிய நிர்வாகிகளான சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நாளை அக்டோபர் 16 மாலை 5 மணிக்கு டெல்லி சென்ட்ரல் பார்க்கில் மூவர்ணக் கொடியை ஏற்றும் போராட்டத்தில் பங்குபெறுவோம் என அந்த அமைப்பின் நிறுவனர் அபிஜித் தீப்கே அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தனது சமூக வலைதள எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், "சவுரப் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோர் மூவர்ணக் கொடியை ஏற்றியதற்காகவே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். தேசியக் கொடியை ஏற்றுவது குற்றமல்ல.

எனவே, தேசபக்தர்களும் மூவர்ணக் கொடியை நேசிக்கும் அனைவரும் நாளை அக்டோபர் 16 மாலை 5 மணிக்கு டெல்லி கன்னாட் பிளேஸில் உள்ள சென்ட்ரல் பார்க்குக்கு தேசியக் கொடியுடன் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அங்கு நாம் தேசியக் கொடியை ஏற்றி, மூவர்ணக் கொடியை ஏற்றுவது குற்றமல்ல என்பதை நிரூபிப்போம்.

டெல்லிக்கு வர முடியாதவர்கள், தங்கள் சொந்த நகரங்களில் மாலை வேளையில் மூவர்ணக் கொடி பேரணிக்கு ஏற்பாடு செய்யுங்கள். மூவர்ணக் கொடி நமது பெருமை என்பதையும், அதை ஏற்றுவது குற்றமல்ல என்பதையும் அந்த சர்வாதிகாரிகள் தெரிந்து கொள்ளட்டும்.

இந்த அழைப்பை விடுத்த பிறகு நான் சிறையில் அடைக்கப்படலாம். ஆனால் நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. மூவர்ணக் கொடி எனது பெருமை; அதை நான் நிச்சயமாக ஏற்றுவேன்" என தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தில் தமிழ்நாடு முதலிடம் - த.வெ.க ஆட்சியின் அவலம்!

சென்னை, அக்.15-

த.வெ.க ஆட்சியில் பணவீக்கத்தில், தேசிய சராசரியைவிட அதிகம் உயர்ந்து 6 புள்ளி 8 1 சதவீதமாக உயர்ந்து, நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது. இந்த அவலத்தினால் அரிசி, சர்க்கரை, பருப்பு ஆகியவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் மக்களின் அன்றாட வாழ்வே பாதிக்கப் பட்டுள்ளது.

த.வெ.க அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டின் பணவீக்கம் அதிகரித்து வருகிறது. அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி என அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்து விண்ணை முட்டுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் அரிசி விலை கடந்த 3 மாதங்களில் அடுத்தடுத்து 4 முறை உயர்ந்து, ஒரு கிலோ அரிசி 100 ரூபாயை எட்டியுள்ளது.

செப்டம்பர் மாதத்தில் தேசிய சராசரி பணவீக்கம் 5 புள்ளி 5 4 சதவீதமாக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டின் பணவீக்கம் 6 புள்ளி 8 1 சதவீதமாக உயர்திருக்கிறது. தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் பணவீக்கம் 1 புள்ளி 27 சதவீதமாக அதிகமாக பதிவாகியுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியின் போது ஜனவரி மாதம் வெறும் 3 புள்ளி 3 6 சதவீதமாக இருந்த பணவீக்கம், த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு கிடுகிடுவென உயர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் தேசிய சராசரியை கடந்து 5 புள்ளி 9 2 சதவீதமாக உயர்ந்தது. தற்போது மேலும் உயர்ந்து தமிழ்நாட்டின் பணவீக்கம் 6 புள்ளி 8 1 சதவீதத்தை எட்டியிருப்பது மக்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமின்றி நாட்டிலேயே செப்டம்பர் மாத பணவீக்கத்தில் தமிழ்நாடு முதலிடத்தை எட்டியுள்ளது.

ஒடிசா, மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, ஆந்திராவை பின்னுக்கு தள்ளி பணவீக்கத்தில் முதலிடத்தை பிடித்து த.வெ.க. அரசு தமிழ்நாட்டை அதல பாதாளத்திற்கு தள்ளி உள்ளது. த.வெ.க. அரசின் நிர்வாகத் திறமின்மை காரணமாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் அன்றாட வாழ்வே பாதிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியம் பகுதி சார்ந்த பா.ஜ.க. நிர்வாகிகள் சுரேஷ், ஆகாஷ், ஹேமாச்சந்திரன், சக்கரவர்த்தி, போஸ் உள்பட பலர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர் ஏ.எல்.விஜயகுமார், நிர்வாகிகள் அர்ஜுன், அறிவரசன், விஜய் தீனா, உள்ளனர்



தி.மு.க இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியில் வசித்து வரும் மு.ஹரிஷ் முருகேசன் குடும்பத்திற்கு கல்வி உதவித்தொகையாக 25,000/ ரூபாய்க்கான காசோலையை அனுப்பி வைத்தார். ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் 25,000 ரூபாய்க்கான காசோலையினை மு.ஹரிஷ் முருகேசன் குடும்பத்தாரிடம் நேரில் சென்று வழங்கினார். நிகழ்வில் வடக்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம், கோபி நகர கழக செயலாளர் என்.ஆர்.நாகராஜ் உடன் உள்ளனர்.